# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2098/18 - 2018 නොවැම්බර් මස 21 වැනි බදාදා - 2018.11.21

2098/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோவை இலக்கம்: GAL/ LAN/ ACQUIS/A13/ 35.
காணி அமைச்சின் கோவை இலக்கம்:
4 - 3/ 9/ 2016/ WS/ 187.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துபிட்ட பத்துவ வடக்கு சிறு பிரிவில் இல. 67, நாரங்கொட கிராம அலுவலர் பிரிவில் பிட்டகல்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கே 3643 ஆம் இலக்க மற்றும் 2018.10.29 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்திற்கேற்ப மொத்த அளவில் 0.0643 ஹெக்டயார் அளவிலான காணித்துண்டுகள்:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: குருகொஸ்கஹமுல வத்த மற்றும் கல்கெட்டியே வத்த; உரிமை கோருபவர்: ஈ. எம். டி. ஆர். பி. ஹத்னாகொட, பிட்டகல்தெனிய, கேகாலை; விஸ்தீரணம்: 0.0378 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர்: குருகொஸ்கஹமுல வத்த மற்றும் கல்கெட்டியே வத்த; உரிமை கோருபவர்: ஈ. எம். டி. ஆர். பி. ஹத்னாகொட, பிட்டகல்தெனிய, கேகாலை; விஸ்தீரணம்: 0.0265 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கலிகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். ஸீ. சுஸன்த ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கலிகமுவ.

பிரதேச செயலகம்,
கலிகமுவ,
2018, நவெம்பர் 16.

12 - 60